# தொல்காப்பிய மன்றம் - கனடா

தொல்காப்பியவழி தொன்மைத் தமிழர்
வரலாறும் பண்பாடும் அறிவோம்
2020

## தமிழ்த்திறன் போட்டி

## பிரிவு : 11

## 2002-2005இல் பிறந்தோர்

# தொல்காப்பிய மன்றம் - கனடா

## முன்னுரை

தமிழின் முதன்மையைப் பறைசாற்றி நிற்கின்றது தொல்காப்பியம். தொன்மை சான்ற நூலை எமக்குத் தந்தருளியவர் தொல்காப்பியர். தொல்காப்பியமே தமிழரின் மொழியின் ஆளுமையையும், ஆளுகையையும் வெளிப்படுத்தும் தொன்மத்தின் கூறாக அமைந்துள்ளது. தொன்மை சான்ற இலக்கிய மரபினை உலகிற்கு எடுத்துக்காட்டி தமிழின் பெருமையையும் அதன் வழி தமிழரின் பாரம்பரியத்தையம், பண்பாட்டையும் எடுத்தியம்பும் பழம்பெரும் பொக்கிசமாக எமக்குக் கிடைத்துள்ளது. தொல்காப்பியம் காலப் பழமையும் கருத்தின் ஆழமும் கொண்ட மிகச்சிறந்த கலைக் களஞ்சியமாகத் திகழ்கின்றது. “கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி குறுகத் தறித்த குறள்” தமிழனது அறநெறியைப் புகட்டுவது போன்று தொல்காப்பியமும் அரும்பெரும் மொழிப் பெட்டகமாகத் திகழ்வது கண்கூடு. சொற்செறிவு, பொருட்செறிவு பொதிந்த தொல்காப்பிய பனுவலை பனம்பாரணர், நச்சினார்க்கினியர், இளம்பூரணர், கல்லாடனார், சேனாவரையர், தெய்வச்சிலையார், பேராசிரியர் போன்றோர் நன்கு கற்றுணர்ந்து உரை தந்துள்ளனர். அத்தோடு தொல்காப்பியத்தின் தொன்மை பற்றி மறைமலையடிகள், வெள்ளைவாரணனார், சோமசுந்தர பாரதியார், வையாபுரிப்பிள்ளை, சீனிவாசக ஐயங்கார், நீலகண்ட சாஸ்திரிகள் போன்றோர் ஆய்ந்து எழுதியுள்ளமை அதன் சிறப்பை எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

தோண்டத்தோண்ட ஊறிவரும் மனற்கேணி போன்று கற்கக் கற்க குறை வில்லாத் தெளிவைத் தந்து வியப்பில் ஆழ்த்துகின்றது தொல்காப்பியம். தமிழின் தொன்மைச்சான்று நூலான தொல்காப்பியத்தின் காலம் ஆய்வுகளின் காரணமாக அதன் ஆழ அகலத்தை மென்மேலும் ஆழங்காண வேண்டும் என்னும் உந்துதலை ஏற்படுத்தியுள்ளது. உலகிற் தோன்றிய பழம் பெரும் நாகரிகங்களில் திராவிட நாகரிகம் ஒன்று என்பதனை எடுத்துக்காட்டுவதற்கு மட்டுமன்றி தமிழைச் செம்மொழியாக்குவதற்கான அடிப்படை இலக்கண நூலாகவும் இது விளங்குகின்றது.

“ஓர் இனத்தை வீழ்த்த வேண்டுமானால் அவர்தம் மொழியை வீழ்த்த வேண்டும்” என்னும் எண்ணப்பாங்கிற்கேற்ப, உலக வரலாற்றில் பல்வேறு எழுச்சியுற்ற காலங்களில் சில இனங்களைச் சிதைத்தும் அழித்தும் வந்துள்ளன. உலகில் தோன்றிய மொழிகளில் பெருந் தொகையானவை அழிந்து போயுள்ளன. இதற்கு வேற்று இனங்களின் தாக்கம், ஆக்கிரமிப்பு, எழுச்சி என்பன காரணிகளாக அமைந்துள்ளன. ஒரு இனத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு ஒன்று மொழி, மற்றது மதம் என்பவை முக்கிய கருவிகளாக உலக வரலாற்றில் அமைந்துள்ளன.

# தொல்காப்பிய மன்றம் - கனடா

அதற்கு எமது தமிழினமும் விதிவிலக்கல்ல. அன்னிய ஆக்கிரமிப்பு, இயற்கையின் சீற்றம் போன்றன வரலாற்றுக் காலந்தொட்டே இடம் பெற்று வந்துள்ளன.

இன்று நாம் தமிழர் என்று கூறிக்கொண்டு தமிழ் தெரியாமல் வாழும் நிலை ஏற்பட்டுவருகின்றது. புலம்பெயர்ந்த மண்ணில் மட்டுமன்றி தாயகத்திலும் இன்று தமிழில் பேச வெட்கப்படும் நிலைமையினைக் காண்கின்றோம். வேற்று மொழி-களைப் பேசுவது பெருமை என நினைக்கின்றோம். தமிழ் உணர்வே இன்றி வாழ்ந்து வருகின்றோம். தமிழை வெறும் வயிற்றை நிரப்புவதற்காக மட்டும் பயன்படுத்தும் நிலைமாறி, இது எங்கள் தாய்மொழி, எமது உணர்வோடு ஒட்டிய மொழி என்னும் உண்மை உணர்வோடு செயற்பட எம்மை ஊக்குவிப்பதற்கான தொன்மை சார்ந்த நூல் ஒன்று உளது என்றால் அது தொல்காப்பியம் தான் என்று துணிந்து கூறமுடியும்.

கனடாவில் வாழும் தமிழ் மொழி கற்கும் மாணாக்கர் இலகுவாகத் தொல்காப்பியம் கூறம் செய்திகளையும் அதனோடு ஒத்த தமிழின செழுந்தன்மையையும், வரலாற்றையும் தெரிந்து கொள்ளும் நோக்கத்தோடு அறிமுகப் படுத்தப்படுவதே மாணவர்களுக்கான இந்தத் தேர்வு வினாக்கொத்து. பெற்றோர் இலகுவாகத் தம்பிள்ளைகளுக்கு எமது பண்பாடு, விழுமியம், மொழி பற்றிய அறிவினை வாழைப்பழத்தில் ஊசி செலுத்துவது போன்று அவர்கள் உள்ளத்தில் ஏற்றிவிட உதவுவதாக அமைக்கப்பட்டுள்ளது. எனவே இவற்றை அக்கறையோடு பிள்ளைகள் கற்றுக்கொள்ள ஆவன செய்ய வேண்டும் என வேண்டுகின்றோம்.

**தொல்காப்பிய மன்றம் - கனடா**

---

## கனடா தொல்காப்பிய மன்றத்தின் செயலவை உறுப்பினர்

1. திரு. சபா. அருள்சுப்பிரமணியம் (தலைவர்)
2. திரு. வ.சுகந்தன் (செயலாளர்)
3. திரு. பா.யாழ்கோவன் (பொருளாளர்)
4. திருமதி. லீலா சிவானந்தன் (துணைத் தலைவர்)
5. திரு. சி.சண்முகராஜா (துணைச் செயலாளர்)
6. திரு. த.சிவபாலு
7. திரு. க.குமரகுரு
8. செல்வி. பொ.குமுதினி
9. திருமதி. வாசுகி நகுலராஜா
10. திரு. கனக மனோகரன்
11. திரு. ச.இராஜேஸ்வரன்

# தொல்காப்பிய மன்றப் பாடல்

## வாழியவே!

ஒல்காப் புகழ்கொண்ட புலவரவர் - தமிழ்
உலகம் போற்றிடும் அறிஞரவர்
தொல்காப் பியன்புகழ் பாடிவரும் - கனடா
தொல்காப் பியமன்றம் வாழியவே!

கனடா மண்ணில் கிளையமைத்தோம் - தமிழ்
கற்றவர் ஏற்றிடப் பணிபுரிவோம்!
மனதாய்த் தமிழர் வாழ்வியலை – தமிழ்
மாணவர் கற்றிட வழிசமைப்போம்!!

கற்றதை மற்றவர் அறிந்திடவே – எங்கள்
கனடாக் கிளைவழி செய்துதரும்
பற்றுடன் நாம்செய்யும் தொண்டுகளால் - இந்தப்
பாரினிற் தமிழ்மொழி வீறுபெறும்!

பண்டைத் தமிழரின் வாழ்வுதனை – நன்கு
படம்பிடித் தழகாய்த் தந்தவரே!
மண்டலம் உன்பணி போற்றுதையா! - இந்த
மாநிலத் தமிழினம் வாழ்த்துதையா!!

எழுத்து சொல்பொருள் எனவகுத்து – தமிழ்
இலக்கணம் செய்து தந்தவனாம்
பழுத்த முதுபெருஞ் சான்றோனாம் – தொல்
காப்பிய னார்புகழ் வாழியவே!

ஒன்பது இயல்களிற் தமிழரது – வாழ்வின்
உண்மைகள் யாவையும் பொதியவைத்து
மன்பதை போற்றிடும் நூலாக – ஆக்கி
வழங்கிய ஆசான் வாழியவே!

சபா. அருள்சுப்பிரமணியம் M.A.

**கையேடு - 11**

## தமிழ்த்திறன் போட்டியின் நோக்கம்:

கனடா தொல்காப்பிய மன்றத்தினால் நடத்தப்படும் இந்த மொழித்திறன் போட்டி மாணவர்களின் மொழி ஆற்றலையும், சொற்களஞ்சியத்தையும் பெருக்கும் நோக்குடன் நடத்தப்படுகிறது. வேற்று இனமக்கள் மத்தியிலே வேற்று மொழியிற் கல்வி பயிலும் எமது தமிழ்ச் சிறார் தமிழ் மொழியை விரும்பிப் படிப்பதற்கு இப்போட்டியிற் பெறும் அறிவு உதவும் என்று நம்புகிறோம்.

சிறுவர் தமது சூழலில் உள்ள பொருட்களின் தமிழ்ப் பெயர்களை அறியவும், சொல்லவும் இப்போட்டி உதவுமெனவும் எண்ணுகிறோம்.

சரியான முறையில் பெற்றோரதும், ஆசிரியர்களதும் ஒத்துழைப்புக் கிட்டும்போது எமது முயற்சி கடந்த ஆண்டுகளைப்போல் இவ்வாண்டும் வெற்றிகரமாக நடை-பெறுமென்று எதிர்பார்க்கிறோம்.

# 2020 பிரிவு 11 தமிழ்த்திறன் போட்டிக்கான விதிமுறைகள்:

2002 - 2005இல் பிறந்தவர்கள் இப்போட்டியிற் பங்கேற்கலாம். இவர்களுக்கான போட்டி 3 நிலைகளில் நடைபெறும்.

1. காணொளிக்காட்சிப்படுத்தல் போட்டி
2. பொது அறிவுப்போட்டி
3. சுழற்சிமுறைக் கேள்வி பதில்

### 1. காணொளிக் காட்சிப்படுத்தல் போட்டி

**காணொளிக்காட்சிப்படுத்தல் போட்டிக்கான தலைப்புக்கள்**

பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை மாணவர்களே தெரிவு செய்யலாம்

1) தமிழ் வளர்த்த பெரியோர்
   (யாராவது ஒருவரைப்பற்றியதாக அமைய வேண்டும்)
2) தொல்காப்பியத்தில் ஏதேனும் ஒரு பகுதி
3) தமிழர் தொல்பொருட்கள் (கீழடி, ஆதிச்சநல்லூர் அல்லது இவைபோன்ற வேறு ஏதாவது)
4) தமிழரின் வாழ்வியல் அல்லது தமிழரின் பண்பாட்டிற்கான பங்களிப்பு
5) வீரம் செறிந்த தமிழ் மன்னர்கள் (இராஜராஜ சோழன், எல்லாளன், சங்கிலியன், பண்டாரவன்னியன் போன்றோர்)

**2. படங்களுக்கான சொற்களை எழுதுதல்:**

- இப்பிரிவினருக்கு 256 படங்கள் பெயர்களுடன் கொடுக்கப்படும். அவற்றிற் குறிப்பிட்ட சொற்கள் மட்டும் கேட்கப்படும்.
- போட்டி முடிவைக் காண்பதில் சிக்கல் ஏற்பட்டால் மேலதிக வினாக்கள் கேட்கப்படும். முடிவு காண்பதில் சிக்கல் ஏற்படும் போது மேலதிக சொற்களின் புள்ளிகள் (bonus) கணக்கில் எடுக்கப்படும்
- படங்களுக்கான சொற்களைக் கூறுதல். மாணவர் பட்டறிவிற்கு உட்பட்டதாக மேலதிக வினாக்களும் கேட்கப்படும்.
- போட்டி நடைபெறும் நாள், இடம், நேரம் என்பன விண்ணப்பதாரிகளுக்குத் தனித்தனியே அறியத்தரப்படும். இணையத்தளம் ஊடாகவும் பார்க்கலாம்.

**3. சுழற்சிமுறைக் கேள்வி பதில்**

1) கேள்விகள் ஒவ்வொன்றாகத் திரையில் காண்பிக்கப்படும்.
2) போட்டியாளர்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் சரியான விடையினைத் தமது வடைத்தாளில் எழுதுதல் வேண்டும்
3) கேள்விக்கான நேரம் முடிவடைந்ததும், உடனேயே நடுவர்களால் அக்கேள்விக்குரிய பதில்கள் சரிபார்க்கப்படும்
4) தவறான விடையளிப்பவர்கள் போட்டியிலிருந்து நீக்கப்படுவார்கள்.
5) சரியான விடையளிப்பவர்களுடன் போட்டி தொடரும்.
6) வெற்றியாளர்களைத் தெரிவுசெய்யும்வரை மேற்கூறியவை சுழற்சிமுறையில் தொடர்ந்து நடத்தப்படும்.


# பலகார வகை

| | |
|---|---|
|  வடை |  முறுக்கு |
|  அரியதரம் |  பகோடா |
|  மோதகம் |  கொழுக்கட்டை |
|  வாய்ப்பன் |  பணியாரம் |

# உடல் உறுப்புகள்



கண்ணிமை



அண்ணம்



நாக்கு



தோள்மூட்டு



கழுத்து



மணிக்கட்டு



முழங்கால்



பாதம்

# உடல் உறுப்புகள்




நெற்றி



முள்ளந்தண்டு



நகம்



நெஞ்சு



தாடி



மீசை



வயிறு




கொண்டை

# பெரியார்கள்




தொல்காப்பியர்



வள்ளுவர்



வீரமாமுனிவர்



அறிஞர் அண்ணா



மு.வரதராசன்



தனிநாயகம் அடிகளார்




நாவலர்



பாரதியார்


# பெரியார்கள்

| | |
|---|---|
| <br>இளங்கோவடிகள் | <br>சோமசுந்தரப்புலவர் |
| <br>ஔவையார் | <br>கபிலர் |
| <br>கம்பர் | <br>நக்கீரர் |
| <br>பாரதிதாசன் | <br>சுவாமி விபுலாநந்தர் |

# பெரியார்கள்



கண்ணதாசன்



எஸ்.ஜே.வி.செல்வநாயகம்



சிறீமாவோ பண்டாரநாயக்கா



பெரியார் ஈ.வே.இராமசாமி



ஜி.யூ.போப்



க.கைலாசபதி



கா.சிவத்தம்பி



சேர்.ஜோன்.ஏ.மக்டொனால்ட்

# பறவைகள்

| | |
|---|---|
|  பூநாரை |  சிட்டுக்குருவி |
|  தீக்கோழி |  கொண்டைலாந்தி |
|  மரங்கொத்தி |  செண்பகம் |
|  கழுகு |  ஆந்தை |

# காய் வகைகள்


நாரத்தங்காய்


வாழைக்காய்



பலாக்காய்


பூசணிக்காய்


அன்னமுன்னாக்காய்


நெல்லிக்காய்


புடலங்காய்


சுரைக்காய்

# மரக்கறி வகைகள்



பீர்க்கங்காய்



கூனைப்பூ



பச்சைக்கோசு



பூக்கோசு



வெண்டிக்காய்



முள்ளங்கி



தண்ணீர்விட்டான்



சீமைப்பூசணி

# வீட்டுப் பொருட்கள்



மின்விசிறி




தொலைக்காட்சிப்பெட்டி



கணினி



தாச்சி



மின்னடுப்பு



குளிர்சாதனப்பெட்டி



தொலைபேசி




மணிக்கூடு

# பாவனைப் பொருட்கள்



அம்மி



ஆட்டுக்கல்



பிட்டு உலை



சுளகு



இடியப்ப உரல்



திரிகை



சூட்டுஅடுப்பு



திருகணை

# பனையோலைப்பயன்பாடு



பெட்டி



கடகம்



கூடை



விசிறி



ஏடு



நீற்றுப் பெட்டி



பிளா



மட்டை வேலி

# பூச்சி வகை



எறும்பு



வண்ணத்துப்பூச்சி



தேள்



வெட்டுக்கிளி



கரப்பான்பூச்சி



மட்டத்தேள்



ஈசல்



தும்பி

# பூச்சி வகை



தேனீ



நுளம்பு



கரப்பான் பூச்சி



கறையான்



சிலந்தி



குளவி



மூட்டைப்பூச்சி



புலிமயிர்ச்சிலந்தி

# மரங்கள்



பனை



தென்னை



பலாமரம்



கமுகு



மூங்கில்



வேம்பு



ஆலமரம்



வாழைமரம்

# கடல் வாழ்வன



கடல்நாய்



கடல்யானை



கடற்சிங்கம்



இறால்




கடலட்டை



சங்கு



சிப்பி



திமிங்கிலம்

# கடல் வாழ்வன

| | |
|---|---|
| <br>நட்சத்திரமீன் | <br>ஓங்கில் |
| <br>நண்டு | <br>விலாங்குமீன் |
| <br>திருக்கைமீன் | <br>நெத்தலிமீன் |
| <br>கடல்ஆமை | <br>சொறிமீன் |

# வீட்டு விலங்குகள்



நாய்




பூனை



முயல்



மாடு



ஆடு



எருது



குதிரை



பன்றி

# காட்டு விலங்குகள்



கருஞ்சிறுத்தை



நரி



யானை




குரங்கு



கழுதைப்புலி



சிங்கம்



ஒட்டகச்சிவிங்கி



சிறுத்தை

# பூக்கள்

| | |
|---|---|
| <br>முல்லைப்பூ | <br>சாமந்திப்பூ |
| <br>காந்தள்பூ | <br>அரளிப்பூ |
| <br>குறிஞ்சிப்பூ | <br>சூரியகாந்திப்பூ |
| <br>எருக்கலம்பூ | <br>நந்தியாவட்டைப்பூ |

# கொடிகள்



கனடா



இலங்கை




அமெரிக்கா




இந்தியா



பிரித்தானியா



பிரான்ஸ்




சுவிஸ்



ஜேர்மனி


# கொடிகள்



சீனா



யப்பான்




மலேசியா




அவுஸ்திரேலியா




கியூபெக்



சேரமன்னர் கொடி



சோழ மன்னர் கொடி



பாண்டிய மன்னர் கொடி

# மங்கலப் பொருட்கள்

| | |
|---|---|
|  |  |
| நிறைகுடம் | வெற்றிலை |
|  |  |
| மாவிலை | பாக்கு |
|  |  |
| பன்னீர்ச்செம்பு | சந்தனம் |
|  |  |
| வாழையிலை | குங்குமம் |

# ஆடை வகைகள்

| | |
|---|---|
| <br>காற்சட்டை | <br>சாரம் |
| <br>உள்ளாடை | <br>துண்டுத்தாவணி |
| <br>சேலை | <br>சால்வை |
| <br>வேட்டி | <br>தலைப்பாகை |

# பழங்கள்


பலாப்பழம்


வில்வம்பழம்


விளாம்பழம்


பப்பாசிப்பழம்


வாழைப்பழம்


மாதுளம்பழம்


வத்தகைப்பழம்


திராட்சைப்பழம்


# கிழங்கு வகை


உருளைக்கிழங்கு


மரவள்ளிக்கிழங்கு


சேப்பங்கிழங்கு


பீற்றூட் - செங்கிழங்கு


வத்தாளைக்கிழங்கு


கருணைக்கிழங்கு


சேனைக்கிழங்கு


முள்ளங்கி

# வாகனங்கள்



சிற்றுந்து



பேருந்து



மிதியுந்து



தொடருந்து



விண்ணுந்து



நீர்மூழ்கிக் கப்பல்



பாரவூர்தி



பாய்க்கப்பல்

# இலை வகை



கறிவேப்பிலை



புதினாக்கீரை



கொத்தமல்லி இலை



முருங்கையிலை



வல்லாரை



பொன்னாங்காணி



பசளிக்கீரை



அகத்திக்கீரை

# எண்கள்

| | |
|---|---|
| 90<br>தொண்ணூறு | 200<br>இருநூறு |
| 300<br>முன்னூறு | 400<br>நானூறு |
| 500<br>ஐந்நூறு | 900<br>தொளாயிரம் |
| 1000<br>ஆயிரம் | 99<br>தொண்ணூற்றொன்பது |

# நினைவுச் சின்னங்கள்



தாஜ்மஹால்



நயகரா நீர்வீழ்ச்சி



சி.என்.கோபுரம்




இந்தியா வாசல்




சிகிரியா



சுதந்திரதேவி சிலை



ஈபில் கோபரம்



சீனப் பெருஞ்சுவர்

# நினைவுச் சின்னங்கள்



தஞ்சைப் பெரிய கோயில்



விவேகானந்தா மலை



திருவள்ளுவர் சிலை



பிரமிட்டு



அஜந்தா குகை



வெளிச்ச வீடு



சிட்னி ஓபரா ஹவுஸ்



பக்கிங்காம் அரண்மனை

# நினைவுச் சின்னங்கள்



யாழ் நூலகம்



இலங்கைப் பாராளுமன்றம்



கண்டி தலதா மாளிகை




மே 18 நினைவுச்சின்னம்



முள்ளிவாய்க்கால் முற்றம்



கனடா நாடாளுமன்றம்



வெள்ளை மாளிகை



சாய்ந்த கோபுரம்

# தொல்காப்பிய மன்றம் - கனடா

# பிரிவு 11 வினா - விடைகள்

### இலக்கணம்

1. வேற்றுமைத் தொகை என்றால் என்ன?
**இரண்டு சொற்களுக்கிடையே வேற்றுமை உருபுகள் மறைந்துவரச் சொற்கள் நிற்பது வேற்றுமைத் தொகை யாகும். குழல் ஊதினான்**

2. உயிருடனோ மெய்யுடனோ சேராத எழுத்து எது?
**ஆய்த எழுத்து**

3. உயர்திணை இருபாற் பொதுப் பெயருக்கு ஒரு உதாரணம் தருக? **மேதை, தலைவர், அறிவாளி, மருத்துவர்**

4. பெயரும் வினையும் இணைந்த கூட்டுப்பெயர் ஒன்றைத் தருக? **தலையிடி, வாயாடி, வானம்பாடி.**

5. காரணப் பொதுப் பெயருக்கு ஓர் உதாரணம் தருக?
**பறவை**

6. 'அறம் செய்ய விரும்பு' இதில் உள்ள எழுவாய் என்ன? **நீ**

7. 'இப்பரிசு எனது நண்பியால் அனுப்பப்பட்டது.' இதன் வாக்கிய அமைப்பு எது? **செயற்பாட்டுவினை வாக்கியம்.**

8. 'திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்' எந்த வாக்கிய வகையைச் சார்ந்தது? **செய்வினை வாக்கியம்**

9. எச்சமாகவும் முற்றாகவும் வழங்கும் வினைச் சொல் ஒன்றைத் தருக? **உண்ணும், காணும்**

10. ஏவல் வாக்கியத்திற்கு உதாரணம் ஒன்று தருக?
**போ, வா, தா**

11. எழுவாயும் செயற்படுபொருளும் மறைந்து நிற்கும் வாக்கியம் ஒன்று தருக? **நன்றாய் படி. இறுக்கிப் பிடித்தான்.**

12. செயப்படுபொருள் அற்ற வாக்கியத்திற்கு ஒரு உதாரணம் தருக? **அனுமன் அசோகவனம் சென்றான்.**
**சூரியன் கிழக்கில் உதித்தது, நான் வந்தேன்.**

13. மொழிக்கு முதலில் மட்டும் வரும் வினா எழுத்துக்கள் எவை? **எ, யா**

14. மொழிக்கு இறுதியில் மட்டும் வரும் வினா எழுத்துக்கள் எவை? **ஆ ஓ**

15. மொழிக்கு முதலிலும் இறுதியிலும் வரும் வினா எழுத்து எது? **ஏ**

16. முதலெழுத்தின் வகைகள் எவை?
**உயிரெழுத்து, மெய்யெழுத்து**

17. சொற்களுக்குள்ளே சுட்டெழுத்து அடங்கி வந்தால் எவ்விதம் அழைக்கப்டும்? **அகச்சுட்டு**

18. மொழிக்கு முதலில் வராத மெய்யெழுத்து வகைகள் எவை?
**ஙகர, டகர, ணகர, ரகர, லகர, ழகர, ளகர, றகர, னகர மெய்கள்.**

19. மொழியின் இறுதியில் வரக்கூடிய எழுத்துக்கள் எவை?
**ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள்**

20. மொழிக்கு இறுதியில் வராத மெய் எழுத்துக்கள் எவை?
**க், ங், ச், ட், த், ப், ற்**

21. து, டு, று - என்னும் எழுத்துக்களில் முடியும் குற்றியலுகரம் எந்தப் பாலை உணர்த்தும்? **ஒன்றன்பால்**

22. அ, ஆ. வ என்னும் எழுத்துக்களின் முடிவு எந்தப்பாலை உணர்த்தும்? **பலவின் பால்**

23. ன் - ஒற்றுக் குறிக்கும் பால் எது? **ஆண்பால்**

24. ர் ஒற்று எந்தபாலைக் குறிக்கும்? **பலர்பாலைக்குறிக்கும்**

25. பேடி என்னும் சொல் எந்தப் பாலை உணர்த்தும்?
**பெண்பால்**

26. மரூஉ (மருவி வரும்) சொல்லுக்கு உதாரணம் தருக?
**சோனாடு (சோழ நாடு)**

27. உரிச்சொல் என்றால் என்ன?
**ஒரு பொருளுக்கு உரிமை பூண்டு நிற்கும் சொல்**

28. உரிச்சொல் எத்தனை வகைப்படும்? **இரண்டுவகைப்படும்**

29. உரிச்சொல்லின் வகைகளைத்தருக?
**1. ஒருபொருள்குறித்த பலசொல்**
**2. பலபொருள்கள்குறித்த ஒருசொல்**

30. ஒரு பொருள் குறித்த பல சொற்களுக்கு உதாரணம் தருக?
**சாலப்பேசினான், நன்றாகப் பேசினான்.**
**உறு புகழ் - பெரும்புகழ், தவமுனிவன் - பெரும்முனிவன்**
**நனி திறன் - அதிக திறன், நனி சுவை - மிக்கச் சுவை**

31. பலபொருட்குறித்த ஒரு சொல்லிற்கு உதாரணம் தருக?
**கடிமனை - காவல் மிகுந்த மனை, கடிமிளகு -**
**காரம்நிறைந்த மிளகு, கடிவாள் - கூரிய வாள்**
**கடிமலர் - அழகு, சிறப்பு**

32. ஆகுபெயர் என்றால் என்ன? **ஒரு பொருளின் பெயரைக் குறிக்காது அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்கு ஆகிவருவது.**

33. ஒரு பொருளின் பெயர் அதற்கே உரிய பொருளைக் குறிக்காது அதன் சினையை மட்டும் குறித்து வருவதனை என்ன ஆகுபெயர் என்பர்? **பொருளாகுபெயர்**

34. "வள்ளுவரைப் படித்தேன். இதல் வள்ளுவர்" என்பது என்ன ஆகுபெயர்? **பொருளாகுபெயர்**

35. ஓரிடத்தின் பெயர் அதனோடு தொடர்புடைய பொருளுக்குப் பெயராகிவருவது எந்த ஆகுபெயர்? **இடவாகுபெயர்**

36. "கனடா வென்றது" என்பது என்ன ஆகுபெயர்? **இடவாகுபெயர்**

37. ஒரு பண்பின் பெயர் அப்பண்பினை உடைய பொருளுக்கு ஆகிவருவது எந்த ஆகுபெயாகும்? **பண்பாகு பெயர்**

38. "நீலஞ்சூடினான்" என்பது எந்த ஆகுபெயர்? **பண்பாகுபெயர்**

39. ஒரு தொழிலின் பெயர் அத்தொழிலோடு தொடர்புடைய பிறிதொரு பொருளுக்கு ஆகிவருவது என்ன ஆகுபெயராகும்?
**தொழிலாகுபெயர்**

40. "பொரியல் உண்டான்" இது என்ன ஆகுபெயர்?
**தொழிலாகுபெயர்**

41. தொன்றுதொட்டுக் காரணம் எதுவும் இன்றி வரும் பெயரை எப்படி அழைப்பர்? **இடுகுறிப் பெயர்**

42. "நீ ஊருக்குப் போனது நல்லது" இதில் வரும் 'போனது' என்பது எவ்வகைச் சொல்? **தொழிற்பெயர்**

43. தொல்காப்பியர் குறிப்பிடும் வினா எழுத்துக்கள் எத்தனை? **மூன்று (3)**

44. தொல்காப்பியர் குறிப்பிடும் குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்? **ஆறு**

45. ஐவகை இலக்கணங்கள் எவை?
**எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி**

46. "மக்களிடையே ஒற்றுமை ஓங்குக" இது எத்தகைய வாக்கியம்? **வியங்கோள் வாக்கியம்**

47. வேற்றுமை என்றால் என்ன?
**பெயர்ச்சொல்லின் பொருளில் ஏற்படும் வேறுபாடு**

48. வேற்றுமை உருபுகளை ஏற்கும் சொல் எது? **பெயர்ச் சொல்**

49. முதலாம் வேற்றுமை எவ்விதம் அழைக்கப்படுகின்றது?
**எழுவாய் வேற்றுமை**

50. இரண்டாம் வேற்றுமையின் உருபு என்ன? **ஐ**

51. இரண்டாம் வேற்றுமையின் பொருள்? **செயப்படுபொருள்**

52. மூன்றாம் வேற்றுமை உருபுகள் எவை?
**ஆல், ஆன், ஒடு, ஓடு - சொல்லுருபு - உடன்**

53. மூன்றாம் வேற்றுமை என்ன பொருட்களைக் கொள்ளும்?
**கருவி, கருத்தா**

54. நான்காம் வேற்றுமை உருபு எது? **கு**

55. நான்காம் வேற்றுமை எந்தெந்தப் பொருட்களைக் கொள்ளும்? **கொடை (கோடல்), பகை, நட்பு, தகுதி, முதற்காரணம், நிமித்த காரணம்**

56. ஐந்தாம் வேற்றுமைக்குரிய உருபுகள் எவை? **இல், இன்**

57. ஐந்தாம் வேற்றுமைப் பொருள்கள் எவை?
**நீக்கம், ஒப்பு, எல்லை, ஏது**

58. ஆறாம் வேற்றுமை உருபு என்ன? **அது, ஆது, அ**

59. ஆறாம் வேற்றுமைப் பொருள் எதனைக் கொள்ளும்?
**தற்கிழமை, பிறிதின் கிழமை (உடமை)**

60. ஏழாம் வேற்றுமை உருபுகள் எவை? **கண், இல், உள், இடம்**

61. ஏழாம் வேற்றுமை பொருட்கள் எவை?
**பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியன.**

62. எட்டாம் வேற்றுமை வேறு எவ்விதம் அழைக்கப்டுகின்றது?
**விளி வேற்றுமை**

63. எட்டாம் வேற்றுமைச் சொற்களின் இறுதியில் வரும் எழுத்துக்கள் எவை? **ஏ, ஓ**

## இலக்கியம்

64. சங்க இலக்கிய நூல்கள் எவை?
**எட்டுத்தொகை, பத்துப்பாட்டு**

65. எட்டுத் தொகை நூல்கள் எவை?

| | |
|---|---|
| 1. **நற்றிணை** | 2. **குறுந்தொகை** |
| 3. **ஐங்குறுநூறு** | 4. **பதிற்றுப்பத்து** |
| 5. **பரிபாடல்** | 6. **கலித்தொகை** |
| 7. **அகநானூறு** | 8. **புறநானூறு** |

66. பத்துப் பாட்டு நூல்கள் எவை?

| | |
|---|---|
| 1. **திருமுருகாற்றுப்படை** | 2. **பொருநர் ஆற்றுப்படை** |
| 3. **சிறுபாண் ஆற்றுப்படை** | 4. **பெரும்பாண் ஆற்றுப்படை** |
| 5. **முல்லைப்பாட்டு** | 6. **மதுரைக்காஞ்சி** |
| 7. **நெடுநல்வாடை** | 8. **குறிஞ்சிப் பாட்டு** |
| 9. **பட்டினப்பாலை** | 10. **மலைபடுகடாம்.** |

67. தமிழர் விளையாட்டுக்களில் ஒன்றைத் தருக? **ஏறுதழுவுதல் கிட்டி புள்ளு, சடுகுடு, எட்டுக் கோடு, கயிறு இழுத்தல், முட்டிஉடைத்தல், போர்த் தேங்காய், பல்லாங்குழி, வழுக்குமரம் ஏறுதல், கொடி எடுத்தல், ஆடுபுலியாட்டம்**

68. தமிழர்களின் தற்காப்புக் கலைகளில் ஒன்றைத் தருக? **சிலம்பம், மல்லாடல் (மற்போரிடல்), வாட்போர், ஈட்டி எறிதல், அம்பும் வில்லும்**

69. சரசோதி மாலை என்னும் காலக்கணித நூலின் ஆசிரியர் யார்? **போஜராஜ பண்டிதர்**

70. சரசோதிமாலை - ஒரு சமூகப் பண்பாட்டு பார்வை பாகம் 1 என்னும் நூலின் ஆசிரியர் யார்? **முனைவர் பால சிவகடாட்சம் அவர்கள்**

71. சரசோதிமாலை எத்தனையாம் ஆண்டு அரங்கேற்றம் செய்யப்பட்டது? **கி.பி. 1310**

72. எல்லாளன் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்த நகர் எது? **அநுரதபுரம்**

73. எல்லாளன் என்னும் தமிழ் மன்னனைத் தோற்கடித்த சிங்கள மன்னன் யார்? **துட்டகைமுனு**

74. கீழைத்தேயக் கலைகளுக்கு அருந்தொண்டாற்றிய தமிழர் யார்? **ஆனந்தக் குமாரசுவாமி**

75. தமிழ்ப் புலவர்கள் பற்றிய தமிழ் புளூட்டாக் (Tamil Plutarch) என்னும் நூலை எதியவர் யார்? **சைமன் காசிச் செட்டி**

76. சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டம் எது? **'ராவ் பகதூர்'**

77. தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையர் உரையை சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் எத்தனையாம் ஆண்டு பதிப்பித்தார்? **1868**

78. சி.வை. தாமேதரம்பிள்ளை அவர்கள் எழுதிய நூல்களில் ஒன்றன் பெயரைத் தருக? **கட்டளைக் கலித்துறை, காந்தமலர் அல்லது கற்பின் மாட்சி, சைவமகத்துவம்**

79. சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் நினைவு விழா எந்தமாதம் கொண்டாடப்படுகின்றது? **தைமாதம்**

80. ஆ.சிங்காரவேலு முதலியார் எழுதி வெளியிட்ட பொருள் விளக்க அகராதியின் பெயர் என்ன? **அபிதான சிந்தாமணி**

81. வீரமாமுனிவர் எழுதி வெளியிட்ட தமிழ் அகராதியின் பெயர் என்ன? **சதுரகராதி**

82. சுவாமி விபுலாநந்தர் எழுதிய நூலின் பெயர் என்ன? **யாழ்நூல்**

83. உலகின் முதலாவது தமிழ்ப்பேராசிரியர் என அழைக்கப்படுபவர் யார்? **சுவாமி விபுலாநந்தர்**

84. இலங்கையின் தலைசிறந்த திறனாய்வாளர் எனக் கருதப்படுபவர் யார்? **க. கைலாசபதி**

85. வன்னிப் பெருநிலப் பரப்பை ஆட்சிசெய்த இறுதித் தமிழ் மன்னன் யார்? **பண்டார வன்னியன்**

## திருக்குறள் தொடர்பானவை

86. திருக்குறளின் முதற் பெயர் என்ன? **முப்பால்**

87. திருக்குறளில் பயன்படுத்தப்படாத இரு சொற்கள் தருக? **தமிழ், கடவுள்**

88. திருக்குறளில் உள்ள சொற்கள் எத்தனை? **14,000**

89. திருக்குறளில் இடம்பெறாத தமிழ் எழுத்துக்கள் எத்தனை? **37**

90. திருக்குறளில் பயன்படுத்தப்படாத ஒரே உயிர் எழுத்து எது? **ஔ**

91. திருக்குறளில் இடம்பெறும் இரண்டு மரங்கள் எவை? **பனை, மூங்கில்**

92. திருக்குறளில் இடம்பெறும் இரு மலர்கள் எவை? **அனிச்சம் மலர், குவளை மலர்**

93. திருக்குறளில் இடம்பெறும் ஒரே பழம் எது? **நெருஞ்சிப்பழம்**

94. திருக்குறளில் இருமுறை வரும் ஒரே அதிகாரம் எது? **குறிப்பறிதல்**

95. திருக்குறளுக்கு முதலில் உரையெழுதியவர் யார்? **மணக்குடவர்**

96. திருக்குறளை முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்? **ஜீ.யு.போப்**

97. திருக்குறளுக்கு உரைதந்த பரிமேலழகர் எத்தனையாவது உரையாசிரியர் ஆவார்? **10வது உரையாசிரியர்**

## ஈழத்தவர்களும் இலக்கிய முயற்சிகளும்

98. துட்டகைமுணு என்னும் சிங்கள இளவரசனால் தோற்கடிக்கப்பட்ட தமிழ் மன்னன் யார்? **எல்லாளன்**

99. வன்னியை ஆண்ட இறுதி மன்னன் யார்? **பண்டாரவன்னியன்**

100. பண்டார வன்னியன் தோற்கடிக்கப்பட்டது எப்போது? **1803**

101. பண்டார வன்னியன் இறந்த ஆண்டு எது? **1811**

102. வீரபாண்டிய கட்டப்பொம்மன் எந்தக்குறிச்சியை ஆண்டு வந்தான்? **பாஞ்சாலங்குறிச்சி**

103. கண்டியை ஆண்ட இறுதி மன்னன் யார்? **கண்ணுச்சாமி என்னும் ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன்**

104. கோசிமின் கவிதைகளை தமிழில் மொழிபெயர்த்த ஈழத்தவர் யார்? **கே. கணேஷ்**

105. எழுத்தாளர் கே. கணேஷ் அவர்களுக்கு கனடாவில் உள்ள எந்த அமைப்பு இலக்கிய விருதினை வழங்கிக் கௌரவித்துள்ளது? **இலக்கியத் தோட்டம்**

106. ஈழத்துப் பூதந்தேவனாரின் காலம் எதுவெனக் குறிப்பிடு கின்றார்கள்? **கி.மு. 2ம் நூற்றாண்டு**

107. "ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்.." என்னும் வரிகள் எந்த நூலில் காணப்படுகின்றது? **பட்டினப்பாலை**

108. உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு இடம்பெறப் பெரிதும் உழைத்த ஈழத்தவர் யார்? **தனிநாயகம் அடிகளார்**

109. நான்காவது தமிழ் ஆராய்ச்சி மகாநாடு எங்கே இடம் பெற்றது? **யாழ்ப்பாணம்**

110. இரண்டாவது தமிழ் ஆராய்ச்சி மகாநாடு எங்கே நடந்தது? **தரமணி, சென்னை**

111. இரண்டாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் எத்தனை அறிஞர்களுக்குச் சிலை எடுக்கப்பட்டது? **பத்துபேர்.**

112. இரண்டாவது தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் யார் யாருக்கு சிலைகள் வைக்கப்பட்டன? **திருவள்ளுவர், ஔவையார், கம்பன், ஜி.யு.போப், கால்டுவெல், பாரதியார், பாரதிதாசன், வ.உ. சிதம்பரனார், வீரமாமுனிவர், கண்ணகி**

113. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூலை வெளியிட்டவர் யார்? **இராபேர்ட் கால்டுவெல்**

114. சங்கீத மும்மூர்த்திகள் எனப்படுவோர் யாவர்? **தியாகராஜர், முத்துசுவாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள்**

115. ஈழத்துப் பூராடனார் என அழைக்கப்படும் அறிஞரின் இயற்பெயர் என்ன? **க.தா. செல்வராசகோபால்**

116. இலக்கியவழி என்னும் நூலை எழுதிய ஈழத்து அறிஞர் யார்? **பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை**

117. ‘கோடை’ என்னும் பா நாடகத்தை எழுதிய ஈழத்தவர் யார்? **மகாகவி உருத்திரமூர்த்தி**

118. வாடைக்காற்று என்னும் நாவலை எழுதியவர் யார்? **செங்கை ஆழியான்**

119. வாடைக்காற்றுத் திரைப்படத்திற்கு திரைக்கதை வசனம் எழுதியவர் யார்? **செம்பியன் செல்வன்**

120. மங்கையரின் பருவங்களை எவ்விதம் வகுத்துள்ளனர்? **பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண்**

121. தமிழில் சுருக்கெழுத்து முறையை உருவாக்கியவர் யார்? **எம். சீனிவாசராவ்**

122. சந்திராயன்-1 விண்கலத்தை அனுப்பிய விஞ்ஞானிகளின் தலைவர்யார்? **மயில்சாமி அண்ணாத்துரை**

123. சந்திராயன் -2 திட்டத்தின் இஸ்ரோ தலைவர் யார்? **கிரான்குமார் சிவன்**

## தொல்காப்பியம் தொடர்பானவை

124. தொல்காப்பியத்திற்கு உரையெழுதிய ஆசிரியர்களின் பெயரைத் தருக? **இளம்பூரணர் (உரையாசிரியர்), நச்சினார்க்கினியர், சேனாவரையர், கல்லாடனார், தெய்வச்சிலையார், பேராசிரியர்**

125. இளம்பூரணர் முழுமையாக உரையெழுதிய நூல் எது? **தொல்காப்பியம்**

126. பனம்பாரனார் காலத்து தமிழகத்தின் வடக்கு, தெற்கு எல்லைகள் எவை? **வடக்கு - வேங்கடமலை, தெற்கு குமரி மலை**

127. தொல்காய்பியம் எந்த மன்னன் முன்னிலையில் அரங்கேற்றம் செய்யப்பட்டது? **பாண்டிய மன்னன்**

128. யார் தலைமையில் தொல்காப்பியம் அரங்கேற்றம் செய்யப்பட்டது? **அதங்கோட்டாசான்**

129. ஐந்திரம் எந்தமொழியின் இலக்கண நூல்? **வடமொழி**

130. தொல்காப்பியத்தின் அதிகாரங்கள் எவை? **எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம்**

131. களவியல், கற்பியல் என்பன எந்த அதிகாரத்தில் இடம்பெற்றுள்ளன? **பொருளதிகாரம்**

132. தொல்காப்பிய சொல்லதிகாரத்திற்கு மட்டும் உரை செய்தவர் யார்? **சேனாவரையர்**

133. பொருளதிகாரத்திற்கு மட்டும் உரை செய்தவர் யார்? **பேராசிரியர்**

134. தொல்காப்பியம் தமிழர்களின் உயிர் நூல் என்று கூறியவர் யார்? **வ.சுப.மாணிக்கனார்**

135. தொல்காப்பியத்தில் யாப்பிலக்கணத்தைக் கூறும் இயல் எது? **செய்யுளியல்**

136. தொல்காப்பியர் எக்குடியில் பிறந்தவர் எனப்படுகின்றது? **தொல்குடியில்**

137. தொல்காப்பியர் குறிப்பிடும் ஓரறிவு என்றால் என்ன? **தொட்டுணர்தல் உதாரணம்: புல்லும், தாவரங்களும்**

138. ஈரறிவு என்றால் என்ன? உதாரணம் தருக? **தொட்டுணர்வு, சுவையுணர்வு (உதாரணம்: நத்தை, முரல், கணவாய்**

139. மூவறிவு என்பது எவை? **தொடுதல், சுவைத்தல், முகர்தல் உதாரணம்: கறையான்**

140. நான்கறிவு என்பன எவை? **தொடுதல், சுவைத்தல், முகர்தல், பார்த்தல் - உதாரணம்: நண்டும் தும்பியும்**

141. ஐந்தறிவு கொண்டவை எவை? **தொடுதல், சுவைத்தல், முகர்தல், பார்த்தல், கேட்டல் உதாரணம்: விலங்குகள், பறவைகள்**

142. ஆறறிவுகள் எவை? **தொடுதல், சுவைத்தல், முகர்தல், பார்த்தல், கேட்டல், சிந்தித்தல்.** உதாரணம் தருக? **மக்கள் (மனிதர்)**

143. யானை, காட்டுப்பன்றி என்பனவற்றின் ஆண்பாற் பெயர் எது? **களிறு**

144. ஏறு என்பது எந்தெந்த விலங்குகளுக்கு உரிய ஆண்பாற் பெயர்? **பன்றி, மான், உழை, கவரி போன்றனவும் கடல் சுறாவும்**

145. **தொல்காப்பியர் குறிப்பிடும் பெண்பாற் பெயர்கள் எத்தனை?** பதின்மூன்று

146. பெண்பாற் பெயர்கள் எவை? **பேடு, பெடை, பெட்டை, பெண், மூடு, நாகு, கடமை, அளகு, மந்தி, பாட்டி, பிணை, பிணவு, பிடி**

147. பார்ப்பு என்பதன் ஒத்தபொருள் தரும் சொல் எது? **குட்டி**

148. நாய்க்கு உரிய பெண்பால் மரபுப்பெயர் என்ன? **பிணவு**

149. மூங்கா எனத் தொல்காப்பியர் குறிப்பிடும் விலங்கு எது? **கீரி**

150. வெருகு என்னும் விலங்கிற்கு இன்று பயன்படுத்தப்படும் பெயர் எது? **காட்டுப்பூனை**

151. ‘கராம்’ எனத் தொல்காப்பியம் குறிப்பிடும் நீர்விலங்கு எது? **முதலை**

152. ‘புல்வாய்’ என அழைக்கப்பட்ட விலங்கு எது? **மான்**

153. ‘பறள்’ எனத் தொல்காப்பியர் எதனைக் குறிப்பிடுகின்றார்? **குட்டி**

154. ‘செல்’ என்னும் சொல் குறிக்கும் உயிரி எது? **கறையான்**

## இலக்கியமும் நிலமும்

155. கைக்கிளை என்பதன் ஒத்தபொருள் தரும் சொல் எது? **ஒருதலைக்காமம்**

156. பெருந்திணை என்பது எதனைக் குறிப்பிடுகின்றது? **பொருந்தாக்காமம்**

157. கரந்தை என்பதன் பொருள் என்ன? **பசுக்களை மீட்டல் - ஆநிரை மீட்டல்**

158. வெட்சித் திணை என்பதன் பொருள் என்ன? **ஆநிரை கவருதல்**

159. முல்லை நிலம் எனப்படுவது எது? **காடும் காடு சார்ந்த இடமும்**

160. நெய்தல் நிலம் எனப்படுவது எது? **கடலும் கடல் சார்ந்த இடமும்**

161. மருத நிலம் எனப்படுவது எது? **வயலும் வயல்சார்ந்த இடமும்**

162. குறிஞ்சி நிலம் எனப்படுவது எது? **மலையும் மலை சார்ந்த இடமும்**

163. பாலை நிலம் எனப்படுவது எது? **மணலும் மணல் சார்ந்த இடமும்**

164. தமிழ் இலக்கியம் கூறும் வாகை எனப்படுவது எது? **வெற்றி**

165. ஐம்பெரும் பூதங்கள் எவை? **நிலம், நீர், தீ, காற்று, வானம்**

166. ஐம்பொறிகள் எவை? **மெய், வாய், கண், மூக்கு, செவி**

167. ஐம்பெரும் குரவர்கள் யாவர்?
**அரசன், குரு, தந்தை, யாசிகன், மூத்தோன்.**

168. ஐம்பெரும் காப்பியங்கள் எவை? **சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி**

169. சுவைகளின் தன்மையைத் தருக?
**கைப்பு, தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு**

170. பெரும் பொழுதுகள் எவை? **கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில்**

171. அகத்திணைகளின் எண்ணிக்கை எத்தனை? **ஏழு**

172. மா.பொ.சிவஞானம் அவர்களைச் சிறப்பிக்கும் அடைமொழி எது? **சிலம்புச் செல்வர்**

173. தனது கல்லறையில் தன்னை ஓர் தமிழ் மாணாக்கன் என எழுதச் சொன்னவர் யார்? **ஜி.யு.போப்**

174. தமிழ் இலக்கியத்தில் ஆசு கவி என அழைக்கப்படுவர்யார்? **காளமேகப் புலவர்**

175. சொல்லின் செல்வர் என அழைக்கப்படுவர் யார்?
**ரா.பி. சேதுப்பிள்ளை**

176. 'பாவலர் ஏறு' என அழைக்கப்படுபவர் யார்?
**பெருஞ்சித்திரனார்.**

177. திரு. வி.க அவர்களை எவ்விதம் அழைப்பர்?
**தமிழ்த் தென்றல்**

178. பூங்காட்டுத் தும்பி, புதுவைக்குயில், பாவேந்தர் என அழைக்கப்படும் கவிஞர் யார்? **பாரதிதாசன்**

179. சைவ சமயக் குரவர்களில் வடமொழியும் தமிழும் நன்கு கற்றுத்தேர்ந்தவர் யார்? **திருநாவுக்கரசர்**

180. சங்க இலக்கிய மரபில் காதல் இலக்கியத்தில் இறைவனைப் பாடிய சமயக்குரவர் யார்? **மாணிக்கவாசகர்**

181. தமிழ் மொழி பேசப்படும் நாடுகள் எவை? **இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா என்பன உட்பட 80 நாடுகள்**

182. உலகில் மொத்தம் எத்தனை மொழிகள் பேசப்படுகின்றன? **2796**

183. தொல்காப்பிய உரைகளில் இளம்பூரணர் எதற்குச் சிறப்பிக்கப்படுகின்றார்? **எழுத்துக்கு**

184. தொல்காப்பிய உரைகளில் சொல்லுக்குச் சிறப்பிக்கப்படும் உரையாசிரியர் யார்? **சேனாவரையர்**

185. உரையாசிரியர் எனச் சிறப்பாகக் குறிப்பிடப்படுபவர் யார்? **இளம்பூரணர்**

186. மொழி ஞாயிறு என அழைக்கப்படுபவர் யார்? **தேவநேயப் பாவாணர்**

187. ஏழிசை மன்னர் எனப்படுபவர் யார்? **தியாகராய பாகவதர்**

188. தமிழ்த் தாத்தா என அழைக்கப்படுபவர் யார்? **உ. வே. சாமிநாதையர்**

189. தமிழ் உரைநடை கைவந்த வல்லாளர் எனப்படுபவர் யார்? **ஆறுமுகநாவலர்**

190. தனித் தமிழ் இலக்கியத்தின் தந்தை யார்? **மறைமலை அடிகள்**

191. மறைமலை அடிகளின் இயற்பெயர் என்ன? **வேதாசலம்**

192. முச்சங்கம் வளர் கூடல் நகர் எனப்படுவது எது? **மதுரை**

193. மதுரைச் சங்கத் தலைவர் மற்றும் நற்றமிழ் புலவர் எனப்படுபவர்? **நக்கீரர்**

194. சூடிக்கொடுத்த நாச்சியார் எனப்படுபவர் யார்? **ஆண்டாள்**

195. குழந்தைக் கவிஞர் என அழைக்கப்படுபவர் யார்?
**அழ வள்ளியப்பா.**

196. மக்கள் கவிஞர் எனப்படுபவர் யார்?
**பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார்.**

197. தமிழ், திராவிட மொழிக்குடும்பத்தைச் சார்ந்தது என்பதனை நிறுவியவர் யார்? **ஜீ.யு.போப்**

198. இரட்டைப் புலவர்கள் என அழைக்கப்படுவோர் யாவர்?
**இளஞ்சூரியர், முதுசூரியர்**

199. தமிழ் எங்கள் உயிருக்கு நேர் எனப்பாடிய கவிஞர் யார்?
**பாரதிதாசன்**

200. தினையளவு போதாச் சிறுபுல் நீண்ட பனையளவு காட்டும் படித்தால், எனத் திருக்குறளைப் பற்றிக் குறிப்பிட்டவர் யார்?
**கபிலர்**

201. கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள், என்று திருக்குறளைக் கூறியவர் யார்? **இடைக்காடர்**

202. வள்ளுவரும் தம் குறள் பாவடியால் வையத்தார் உள்ளுவதெல்லாம் அளந்தார் ஓர்ந்து எனத் திருக்குறளைப் பற்றிப் புகழ்ந்துள்ளவர் யார்? **பரணர்**

203. அணுவைத் துளைத்து ஏழ் கடலைப்புகட்டிக் குறுகத் தறித்த குறள் எனப்பாடியவர் யார்? **ஔவையார்**

204. ‘காணி நிலம் வேண்டும் பராசத்தி காணி நிலம் வேண்டும்’ எனப் பாடியவர் யார்? **பாரதியார்**

205. மயிலுக்குப் போர்வை ஈந்த வள்ளல் யார்? **பேகன்**

206. முல்லைக்குத் தேர் ஈந்த வள்ளல் யார்? **பாரி**

207. ஔவைக்கு நெல்லிக்கனி தந்த மன்னன் யார்? **அதியமான்**

208. முகர்ந்ததும் வாடிவிடும் என்றும் பெண்களுக்கு உவமான மாகக் கருதப்பட்ட மலர் எது? **அனிச்சம் மலர்**

209. ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் எந்த அரசமரபைச் சேர்ந்தவன்? **பாண்டிய மரபு**

210. இராஜ ராஜ சோழன் கட்டிய கோவிலின் பெயர் என்ன? **தஞ்சைப் பெரிய கோவில்**

211. தமிழர் விளையாட்டுக்களில் ஒன்றைத் தருக? **கிளித்தட்டு, ஏறுதழுவுதல், கிட்டி புள்ளு, சடுகுடு, எட்டுக்கோடு, கயிறு இழுத்தல், முட்டி உடைத்தல், போர்த்தேங்காய், பல்லாங்குழி, வழுக்குமரம் ஏறுதல், கொடி எடுத்தல், ஆடுபுலி**

212. தமிழர்களின் தற்காப்புக் கலைகளில் ஒன்றைத் தருக? **சிலம்பம், மல்லாடல் (மற்போரிடல்), வாட்போர், ஈட்டி எறிதல், அம்பும் வில்லும்,**

## கண்டுபிடிப்புக்கள்

213. பின்வருவன எந்தெந்த ஆண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்டன?

| | |
|---|---|
| **நீராவிப் படகு:** | **1802** |
| **புகையிரத வண்டி:** | **1802** |
| **அம்மைப் பால்:** | **1803** |
| **தீக்குச்சி கண்டுபிடிக்கப்பட்டது:** | **1827** |
| **மின் குமிழ்:** | **1828** |
| **இரு சக்கர உந்துவண்டி:** | **1839** |
| **தந்தி மூலம் செய்தி அனுப்பும் முறை:** | **1837** |
| **கண்ணாடிப் பொருட்கள்:** | **1887** |
| **மின் கடிகாரம்:** | **1840** |
| **தண்டவாளம் :** | **1825** |
| **திரைப்படம்:** | **1887** |
| **ஐ.நா. சபை:** | **1945** |

214. தமிழ் நாட்டில் உள்ள கீழடியில் கண்டுபிடிக்கப்பட்ட ஈராயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னர் பாவனையில் இருந்த பொருள்கள் அண்ணளவாக எத்தனை? **1800**

## மொழிபெயர்ப்பு - ஆங்கிலப் பதத்திற்குத் தமிழ்ப் பதம்

215. பின்வரும் ஆங்கிலப் பதங்களுக்கான தமிழ்ப் பதங்களைத் தருக?

| | | | |
|---|---|---|---|
| **Calculator** | - கணிப்பான் | **Intenet** | - இணையம் |
| **Website** | - இணையத்தளம் | **App / Processor** | - செயலி |
| **Browser** | - உலாவி | **Keyboard** | - விசைப்பலகை |
| **Printer** | - பதிப்பான் | **Zoology** | - விலங்கியல் |
| **Physics** | - பௌதிகவியல் | **Economics** | - பொருளியல் |
| **Fig fruit** | - அத்திப்பழம் | **Bitter gourd** | - பாகற்காய் |
| **Margosa tree** | - வேப்ப மரம் | **Banyan tree** | - ஆல மரம் |
| **Arecanut** | - பாக்கு | **Jack fruit** | - பலாப்பழம் |
| **Bamboo** | - மூங்கில் | **Bottle gourd** | - சுரைக்காய் |
| **Wood -apple** | - விளாம்பழம் | **Lotus** | - தாமரை |
| **Indian Drum-stick or horse - radish** | | | - முருங்கைக்காய் |
| **Jasmine flower** | - மல்லிகை மலர் | | |
| **Brinjal or Eggplant** | | | - கத்தரிக்காய் |
| **Pomegranate** | - மாதுளம்பழம் | **Camomile** | - சாமந்தி |
| **Chemistry** - இரசாயனவியல் / வேதியியல் | | | |

## மொழிபெயர்ப்பு - தமிழ்ப் பதத்திற்கு ஆங்கிலப் பதம்

216. பின்வரும் தமிழ்ப் பதங்களுக்கான ஆங்கிலப் பதங்களைத் தருக:

| | |
|---|---|
| தேரை | - **Toad** |
| தேள் | - **Scorpion** |
| குளவி | - **Wasp** |
| நீர்யானை | - **Hippopotamus** |
| வரிக்குதிரை | - **Zebra** |
| இறால் | - **Shrimp** |
| கடலாமை | - **Sea Turtle** |
| ஆமை | - **Tortoise** |
| நுளம்பு | - **Mosquito** |
| நாகபாம்பு | - **Cobra** |
| பல்லி | - **Lizard** |
| மஞ்சள் | - **Turmeric** |
| புளி | - **Tamarind** |
| கறுவா, இலவங்கம் | - **Cinnamon** |
| நெல் | - **Paddy** |
| கோள்கள் | - **Planets** |

## நாடுகளும் தலைநகரங்களும்

217. இந்திய நாட்டின் தலைநகரம் எது? **புதுடெல்கி**

218. இலங்கை நாட்டின் தலைநகரம் எது? **கொழும்பு**

219. சீனா நாட்டின் தலைநகரம் எது? **பீஜிங்**

220. ரஷ்யா நாட்டின் தலைநகரம் எது? **மொஸ்கோ**

221. இங்கிலாந்து நாட்டின் தலைநகரம் எது? **இலண்டன்**

222. பிரான்ஸ் நாட்டின் தலைநகரம் எது? **பாரிஸ்**

223. ஜேர்மெனி நாட்டின் தலைநகரம் எது? **பேர்லின்**

223. மலேசியா நாட்டின் தலைநகரம் எது? **கோலாலம்பூர்**

224. வங்காளதேசம் நாட்டின் தலைநகரம் எது? **டாக்கா**

225. பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகரம் எது? **மனிலா**

226. இத்தாலி நாட்டின் தலைநகரம் எது? **உறோம்**

227. ஈரான் நாட்டின் தலைநகரம் எது? **டெ.்.ஹ்ரான்**

228. ஈராக் நாட்டின் தலைநகரம் எது? **பாக்டாட்**

229. சவூதிஅரேபியா நாட்டின் தலைநகரம் எது? **றியாட்**

230. ஐக்கியஅரபுக் குடியரசின் தலைநகரம் எது? **டுபாய்**

231. கனடாவின் தலைநனரம் எது? **ஒட்டாவா**

232. ஐக்கிய அமெரிக்காவின் தலைநனரம் எது? **வாசிங்டன்**

233. ஜப்பான் நாட்டின் தலைநகர் எது? **ரோக்கியோ**

234. ரஷ்யாவின் தலை நகரம் எது? **மொஸ்கோ**

235. நோர்வே நாட்டின் தலைநகரம் எது? **ஒஸ்லோ**

## நாடுகளும் தலைவர்களும்

236. ஐக்கிய அமெரிக்க நாட்டின் தலைவர் யார்? **டொனால் றம்ப்**

237. இலங்கையின் ஜனாதிபதி யார்? **கோத்தபாய ராஜபக்ச**

238. ஸ்ரேல் நாட்டின் பிரதமர் யார்? **நெத்தனியாகு**

239. பாகிஸ்தான் பிரமர் யார்? **இம்ரான் கான்**

240. ஐக்கிய இராச்சியத்தின் (பிரித்தானியா)பிரதமர் யார்? **பொறிஸ் யோன்சன்**

241. கனடா பிரதமர் யார்? **ஜஸ்ரின் ரூடோ**

242. இலங்கையின் பிரதமர் யார்? **மகிந்த ராஜபக்ஜ**

243. இந்தியாவின் பிரமர் யார்? **நரேந்திர மோடி**

244. தென் கெரிய தலைவர் யார்? **மூன்ஜே இன்**

245. வட கொரிய தலைவர் யார்? **கிம் யொங் உன்**

## கொரோனா வைரஸ் பற்றிய தகவல்கள்

246. கொரோனா வைரஸ் எந்த நாட்டில் முதலில் பரவத் தொடங்கியது? **சீனாவில்**

247. கொரோனா வைரஸ்-19 பற்றி எப்பொழுது முதன் முதலில் அறியப்பட்டது? **ஜனவரி 7, 2020**

248. உலக சுகாதரா அமைப்பு கொரோனா வைரஸை உயிர்கொல்லி நோயாகப் பிரகடனப்படுத்தியது எப்போது? **ஜனவரி 30, 2020**

249. உலக சுகாதார அமையத்தின் பணிப்பாளர் நாயகம் யார்? **ரெட்றொஸ் அடாநொம்**

250. கொரோனா வைரஸ் நோய் தொற்றாமல் இருப்பதற்குச் செய்ய வேண்டியவற்றுள் ஒன்று? **தனிமையில் இருத்தல்**

## கண்டுபிடித்தவர்களும் கண்டுபிடித்தவையும்

| | | |
|---|---|---|
| 251. றெலிபோன் | - | கிரகாம் பெல் |
| வானொலி | - | மர்க்கோனி |
| தொலைநோக்கி(றெலஸ்கோப்) | - | கலிலியோ |
| நீராவி யந்திரம் | - | ஜேம்ஸ் வாட் |
| எலிவேற்றர் | - | எலிஸ்லா ஒஸகின் |
| மின்குமிழ் | - | தோமஸ் எடிசன் |
| மோட்டார் வண்டி | - | கென்றி போர்ட் |
| வானூர்தி | - | றைட் சகோதரர் |
| தெலைக்காட்சி | - | பிலோ பிரான்ஸ் வேர்த் |
| இன்சுலின் | - | பிரெடரிக் ஜி. பான்சிங் |
| றேடியம் பொலேனியம் | - | மேரிகியூரி |
| மின் கடத்தி கம்பி | - | அந்திரே மேரி அம்பரே |

## பொதுவானவை

252. யாழ் நூலகத்தின் சின்னம் எது? **கலைவாணி**

253. சங்கிலியன் சிலையின் தோற்றம் எப்படி அமைந்துள்ளது? **குதிரையில் வாளேந்திச் செல்லும் மன்னன்**

254. பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்ட இடத்தில் எழுப்பப்பட்ட கற்சிலை எதனைக் குறிக்கின்றது? **பண்டாரவன்னியன் 'வொன்றிபேக்' என்னும் தளபதியால் 1803ல் தோற்கடிக்கப்பட்டதைக் குறிக்கிறது.**

255. இராவணனால் அமைக்கப்பட்டதாகக் கருதப்படும் திருகோண மலையில் உள்ள நீரூற்று எது? **ஏழு வெந்நீரூற்றுகள்**

256. வள்ளுவர் கோட்டம் எங்கே உள்ளது? **தென்னிந்தியாவில்**

257. இங்கிலாந்திலுள்ள பழமைவாய்ந்த மணிக்கூடு எது? **"பிக்பென்" மணிக்கூடு**

258. இலங்கையில் கௌதமபுத்தரின் பல்லைக் கொண்ட இடமெது? **கண்டி தலதாமாளிகை**

259. கனடாவில் சிறப்பு மிக்க கோபுரம் எது? சீ. என். ரவர் கனடா

260. அந்நியர் இலங்கையை எப்போது கைப்பற்றினர்? **1505**

261. இலங்கை எப்போது சுதந்திரம் அடைந்தது? **1948ஆம் ஆண்டில்.**


நவீன வடிவமைப்புடன் அனைத்து விதமான இணையத்தள தேவைகளுக்கும்
RouterSale.com
விற்பனைக்கு பிறகுமான சேவை
தேர்ச்சி பெற்ற வடிவமைப்பாளர்கள்
Mobile Friendly
Until You satisfied unlimited free updates
We Train You to Do the Updates on your site by yourSelf.
Standard SEO service included
647-891-7253
email us info@routersale.com


FREE STAGING
FREE HOME EVALUATION
FLEXIBLE COMMISSION
Your popular neighbourhood realtor
HOMELIFE/FUTURE REALTY INC. BROKERAGE.,
Independently Owned and Operated
RAJKUMAR
RASIAH
Sales Representative
Dir : 416-707-1674
Off: 905-201-9977
Fax: 905-201-9229
r_rasiah@hotmail.com
205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
www.rajkumarhomes.ca








தொல்காப்பிய மன்றம் - கனடா

தொல்காப்பிய மன்றம்

கனடா

# தமிழ்த்திறன் போட்டி
## பிரிவு 11
## 2002 - 2005இல் பிறந்தோர்


Web: www.tolkappiyam.ca
Email: tolcanada@gmail.com
Tolkappiyam-Canada